# காஞ்சிபுரம் மாவட்டம்

## இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

## 11 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 20 X 1 = 20 | | |
|---|---|---|
| 1 | ஈ | வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல் |
| 2 | ஆ | பணியாளர் |
| 3 | ஈ | இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம் |
| 4 | அ | இரட்டைத் தன்மை |
| 5 | ஈ | பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு |
| 6 | ஈ | ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய |
| 7 | ஈ | அனைத்து கணக்குகளும் |
| 8 | அ | விற்பனை கணக்கு |
| 9 | அ | எதிர்ப்பதிவு |
| 10 | ஈ | ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது |
| 11 | ஆ | பேரேட்டில் எடுத்து எழுதும் போது தவறான கணக்கில் சரியான பக்கத்தில் பதிவு செய்தல் |
| 12 | அ | சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள்முதல் |
| 13 | ஆ | இறுதியில் |
| 14 | ஆ | வருவாயின வரவு |
| 15 | இ | கடன் பக்கத்தில் |
| 16 | ஈ | புலனாகச் சொத்து |
| 17 | இ | இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம் |
| 18 | அ | கணினி அமைப்பு செயலிழத்தல் |
| 19 | ஆ | செயல்பாட்டு மென்பொருள் |
| 20 | அ | ₹. 1,950 வரவு இருப்பு |

### பகுதி - II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 2 = 14

**21. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?**

- கணக்கியல் கருத்துகள் என்பது, கணக்கியல் அடிப்படை அனுமானங்கள் ஆகும்.
- மேலும் கணக்கியல் கருத்துகள் என்பது, பரந்த ஒருமித்த கருத்துகளின் விளைவாகும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**22. பேரேடு என்றால் என்ன?**

- பேரேடு என்பது ஆள்சார், சொத்துகள், பொறுப்புகள், செலவுகள் மற்றும் வருமானம் ஆகிய கணக்குகளில் இடம் பெற்றுள்ள மற்றும் ஒரு குறிப்பிட்டகாலத்திற்குரிய தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்று திரட்டி அதன் இறுதி விளைவைக் காட்டக் கூடிய ஒரு தொகுப்பு அறிக்கையாகும்.

**23. இருப்பாய்வு என்றால் என்ன?**

- இருப்பாய்வு என்பது, ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கை ஆகும்.

**24. ரொக்க ஏட்டின் வகைகள் யாவை?**

i. தனிப்பத்தி ரொக்க ஏடு ( ரொக்கப்பத்தி மட்டும்)
ii. ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏடு ( இருபத்தி ரொக்க ஏடு )
iii. ரொக்கம், தள்ளுபடி மற்றும் வங்கிப் பத்திகளுடைய ரொக்க ஏடு ( முப்பத்தி ரொக்கஏடு )

- இந்த முதன்மையான ரொக்க ஏட்டினைத் தவிர, **சில்லறை ரொக்க ஏடும்** தயாரிக்கப்படுகிறது.

**25. குறிமுறை என்றால் என்ன?**

- குறிமுறை என்பது ஒரு அடையாளகுறி.
- பொதுவாக கணினிமயக் கணக்கியல், கணக்குகளை குறிமுறையாக்குதலை உள்ளடக்கியதாகும்.
- எண்ணற்றக் கணக்குகள் இருக்கும் நிறுவனங்களில், கணக்குகள் குறிமுறையாக்கம் அவசியமாகின்றது.
- குழுக்களுக்கும் மற்றும் அதன் கூறுகளுக்கும் இடையே ஒரு படிநிலையான தொடர்பு இருக்கும்.
- குழுக்களுக்கும் மற்றும் அதன் துணை குழுக்களுக்கும் இடையேயான படிநிலை தொடர்பைப் பராமாரிப்பதற்காக பொருத்தமான குறிமுறையாக்கம் தேவைப்படுகின்றது.

**26.**

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| அ | முதல் | ஆள்சார் கணக்கு |
| ஆ | கட்டடம் | சொத்து கணக்கு |
| இ | உள் ஏற்றிச்செல் செலவு | பெயரளவு கணக்கு |
| ஈ | கொடுபடவேண்டிய கூலி | ஆள்சார் கணக்கு |

**27.**

சொத்தின் ஆரம்ப அடக்கவிலை = வாங்கிய விலை + நிறுவகைச் செலவுகள்

= ₹. 40,000 + ₹. 2,000 = ₹. 42,000

$$\text{ஆண்டு தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை} - \text{எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$$

$$= \frac{42{,}000-0}{5} = \frac{42{,}000}{5} = ₹.\ 8{,}400$$

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

28. பின் வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்யவேண்டும் என்று குறிப்பிடுக.

அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது - ரொக்க ஏட்டில்
ஆ) கடனுக்கு சரக்கு விற்றது - விற்பனை ஏட்டில்
இ) கடனுக்கு சரக்கு வாங்கியது - கொள்முதல் ஏட்டில்
ஈ) கடனுக்கு சொத்துகள் வாங்கியது - உரிய குறிப்பேட்டில்

29. ப **சஞ்சயின் ஏடுகளில் 31, டிசம்பர் 2017 ம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 10,000 | விற்பனை | 40,600 |
| கொள்முதல் | 26,100 | இறுதி சரக்கிருப்பு | 13,500 |
| மொத்த இலாபம் கீ/இ | 18,000 | | |
| | 54,100 | | 54,100 |

30. கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு என்றால் என்ன?

- தவணை நாள் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வாடிக்கையாளர் உரிய நேரத்தில் பணம் செலுத்துவதை ஊக்குவிப்பதற்காக சரக்கு அளித்தவரால் வழங்கப்படுவது ரொக்கத் தள்ளுபடியாகும்.
- இத்தள்ளுபடியை வழங்குவதற்காக, பற்பல கடனாளிகள் மீது உருவாக்கப்படும் ஒதுக்கு கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு எனப்படுகிறது.

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 3 = 21

31. . இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

| | | |
|---|---|---|
| ஆள்சார் கணக்கு | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| சொத்து கணக்கு | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வரை வரவு செய்க |
| பெயரளவு கணக்கு | அனைத்துச் செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |



32. **வினோத்தின் தொடக்கப் பதிவு**

| நாள் | விவரம் | பே.பு.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஜனவரி 1 | ரொக்கம் க/கு ப | | 40,000 | |
| | சரக்கிருப்பு க/கு ப | | 50,000 | |
| | ராஜி க/கு ப | | 50,000 | |
| | இயந்திரம் க/கு ப | | 40,000 | |
| | ஹரி க/கு | | | 30,000 |
| | முதல் க/கு (சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கொணரப்பட்டது) | | | 1,50,000 |

33. கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக. ( ஏதேனும் 3 )

1) **முறையானபதிவேடுகள்**
   - அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில், முறையாகவும், பொதுவான தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டும் தொகுக்கப் படுகின்றன.
2) **நிதிநிலைஅறிக்கைகள் தயாரித்தல்**
   - வருமான அறிக்கை அல்லது இறுதிக் கணக்குகளை, உரிய காலங்களில் தயாரிப்பதன் மூலம் ,வணிகத்தின் இயக்க முடிவுகளையும், நிதி நிலையையும் அறிய முடியும்.
   - இது உரிமையாளர்களுக்கு இலாபத்தை வழங்கவும், வணிகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு நிதியை அளிக்கவும் உதவுகிறது.
3) **வளர்ச்சியை மதிப்பிடல்**
   - வணிகத்தின் நீர்மைத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் ஆகியவற்றின் முழுமையான நிலையினை நிர்வாகத்திற்கு கணக்கியல் அளிக்கிறது.
4) **முடிவெடுக்க உதவுதல்**
   - நிர்வாகம் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான, உரிய தகவல்களை கணக்கியல் அளிக்கிறது.
   - அந்தத் தகவல்களின் அடிப்படையில் எதிர்காலக் கொள்கைகளையும் திட்டங்களையும் நிர்வாகம் உருவாக்குகிறது.
5) **பயனீட்டாளர்களுக்கு தகவல் தருதல்**
   - உரிமையாளர்கள், நிர்வாகம், கடனீந்தோர், பணியாளர்கள், நிதி நிறுவனங்கள், வரிவிதிப்பு அதிகாரிகள் மற்றும் அரசாங்கம் போன்ற பல்வேறு பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் தகவல்களைத் தருகிறது.
6) **சட்டச் சான்றாக இருத்தல்**
   - பொதுவாக நீதிமன்ற வழக்குகளிலும் இதர ஆணையங்களிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண கணக்கேட்டுப்பதிவுகள் சான்றாக ஏற்கப்படுகின்றன.
7) **வரி கணக்கிடுதல்**
   - வருமானவரி மற்றும் இதரவரிகள் கணக்கிடுதல் மற்றும் செலுத்தலில் கணக்கேடுகள் அடிப்படை ஆதாரமாக இருக்கின்றன.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

34.

குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2020 ஜன 1 | ரொக்க க/கு ப<br>முதல் க/கு<br>( ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 10,000 | 10,000 |
| 5 | வங்கி க / கு ப<br>ரொக்க க / கு<br>( வங்கியில் ரொக்கம் செலுத்தியது | | 5,000 | 5,000 |
| 7 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ) | | 1,000 | 1,000 |

பேரேட்டுக் கணக்குகள்

ப ரொக்க கணக்கு வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2020 ஜன 1 | முதல் க/கு | | 10,000 | 2020ஜன 5 | வங்கி க/கு | | 5,000 |
| | | | | 7 | கொள்முதல் க/கு | | 1,000 |
| | | | | 31 | இருப்பு கீ/ இ | | 4,000 |
| | | | 10,000 | | | | 10,000 |
| 2016 பிப்ரவரி 1 | இருப்பு கீ/கொ | | 4,000 | | | | |

35. முப்பத்தி ரொக்க ஏட்டின் மாதிரி படிவம்

............... நாளுக்குரிய முப்பத்தி ரொக்க ஏடு

| நாள் | பெறுதல்கள் | இ.எ | பே.ப.எ | தொகை ₹ | | | நாள் | செலுத்தல்கள் | சா.சீ.எ | பே.ப.எ | தொகை ₹ | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தள்ளுபடி | ரொக்கம் | வங்கி | | | | | தள்ளுபடி | ரொக்கம் | வங்கி |
| | | | | | | | | | | | | | |

36.

திரு. ஜெயக்குமார் என்பரது ஏடுகளில் 31.12.2020 ஆம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியல்

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 300 |
| **கூட்டுக:**<br>விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப்படுத்தப்படாதது | | 1,000 |
| | | 1,300 |
| **கழிக்க:**<br>வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது | | 500 |
| வங்கி அறிக்கையின் படி இருப்பு | | 800 |

37.

திருத்தியப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ | ஆனந்த் க/கு ப<br>விற்பனை க/கு<br>( ஆனந்துக்கு கடனுக்கு சரக்கு விற்றது, விற்பனை ஏட்டில் பதியாததை திருத்தியது ) | | 1,000 | 1,000 |
| ஆ | பழுதுபார்ப்பு க/கு ப<br>இயந்திர க/கு<br>(பழுதுபார்ப்புச் செலவு, தவறாக இயந்திர கணக்கில் பற்று வைக்கப்பட்டதை திருத்தியது ) | | 400 | 400 |
| இ | சம்பளம் க/கு ப<br>காந்திராஜ் க/கு<br>( சம்பளம் செலுத்தியது, தவறாக காந்திராஜ் கணக்கில் பற்று வைக்கப்பட்டதை திருத்தியது) | | 2,000 | 2,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

38.

## தேய்மானத் தொகை காணல்

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| நிலைச்சொத்தின் மதிப்பு ( ₹. 10,000 + ₹. 2,000 + ₹. 7,000 + ₹. 1,000 ) | 20,000 |
| கழிக்க : முதல் ஆண்டு தேய்மானம் ( 20,000 x 10/100 ) | 2,000 |
| | 18,000 |
| கழிக்க : இரண்டாம் ஆண்டு தேய்மானம் ( 18,000 x 10/100 ) | 1,800 |
| கழிக்க : மூன்றாம் ஆண்டு தேய்மானம் ( 16,200 x 10/100 ) | 16,200 |
| | 1,620 |
| சொத்தின் ஏட்டு மதிப்பு | 14,580 |

∴முதல் ஆண்டு தேய்மானம் ₹. 2,000
இரண்டாம் ஆண்டு தேய்மானம் ₹. 1,800
மூன்றாம் ஆண்டு தேய்மானம் ₹. 1,620

39. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.

| வ.எண் | அடிப்படை | முதலின வரவு | வருவாயின வரவு |
|---|---|---|---|
| 1 | தன்மை | அடிக்கடி நிகழாதத் தனமையுடையது | அடிக்கடி நிகழும் தனமையுடையது |
| 2 | அளவு | பெரும்பாலும் பேரளவிலான தொகையாக இருக்கும் | சிறிய அளவிலான தொகையாக இருக்கும் |
| 3 | பகிர்வு | இத்தொகையை இலாபமாக கருதி பகிர்ந்தளிக்க முடியாது | வருவாயின செலவைக் காட்டிலும், மிகுதியான வருவாயின வரவுகள், இலாபமாகக் கருதிப் பகிர்ந்து அளிக்கப்படும் |



40.

## இலாப நட்ட கணக்கு

ப வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| அலுவலக வாடகை | | 10,000 | மொத்த இலாபம் கீ/கொ | | 50,000 |
| தள்ளுபடி கொடுத்தது | | 12,000 | வட்டி பெற்றது | | 2,000 |
| விளம்பரம் | | 4,000 | | | |
| தணிக்கைக் கட்டணம் | | 1,000 | | | |
| வெளித்தூக்கு கூலி | | 2,500 | | | |
| பொதுச் செலவுகள் | | 3,000 | | | |
| நிகர இலாபம் | | 19,500 | | | |
| | | 52,000 | | | 52,000 |

## குதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. அ)

### இராஜா ஹோட்டலின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| ஜனவரி 1 | ரொக்க க/கு ப<br>இராஜா முதல் க/கு<br>( ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 3,00,000 | 3,00,000 |
| 2 | கொள்முதல் க / கு ப<br>ராஜு க / கு<br>( கடன் கொள்முதல் செய்தது ) | | 1,00,000 | 1,00,000 |
| 3 | வங்கி க/கு ப<br>ரொக்க க/கு<br>(வங்கியில் ரொக்கம் செலுத்தியது) | | 2,00,000 | 2,00,000 |
| 20 | வங்கி க/கு ப<br>வங்கி கடன் க/கு<br>( வங்கியில் கடன் பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |
| 22 | எடுப்புகள் க/கு ப<br>வங்கி க/கு | | 800 | 800 |



www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| | ( சொந்த உபயோகத்திற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ) | | | |
| 23 | ராஜு க/கு ப<br>வங்கி க/கு<br>பெற்ற தள்ளுபடி க/கு<br>( ராஜு க/கு தீர்க்கப்பட்டது ) | | 1,00,000 | 99,000<br>1,000 |
| 25 | எடுப்புகள் க/கு ப<br>வங்கி க/கு<br>(உரிமையாளரின் சந்தா காசோலை மூலம் செலுத்தியது ) | | 200 | 200 |
| 26 | எடுப்புகள் க/கு ப<br>வங்கி க/கு<br>(மின் கட்டணம் எடுப்பு அட்டை மூலம் செலுத்தியது ) | | 2,000 | 2,000 |
| 31 | அறக்கட்டளை க/கு ப<br>கொள்முதல் க/கு<br>( உணவு இலவசமாக அறக்கட்டளை அமைப்பிற்கு வழங்கியது ) | | 1,000 | 1,000 |
| 31 | பாதுகாப்பு பெட்டக வாடகை க/கு ப<br>வங்கி க/கு<br>( பெட்டக வாடகை செலுத்தியது ) | | 1,000 | 1,000 |

( அல்லது )

41. ஆ) **கணக்கியல் சமன்பாடு**

| வ. எண் | நடவடிக்கைகள் | சொத்துக்கள் | | | | | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரொக்கம் ₹. | சரக்கிருப்பு ₹. | அறைகலன் ₹. | வங்கி ₹. | கடனாளி ₹. | = | முதல் ₹. | கடனீந்தோர் ₹. |
| அ | ரொக்கம் மற்றும் சரக்குடன் தொழில் தொடங்கியது | + 1,40,000 | + 60,000 | 0 | 0 | 0 | = | + 2,00,000 | 0 |
| | சமன்பாடு | + 1,40,000 | + 60,000 | 0 | 0 | 0 | = | + 2,00,000 | 0 |
| ஆ | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | -20,000 | 0 | + 20,000 | 0 | 0 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +1,20,000 | + 60,000 | + 20,000 | | 0 | = | + 2,00,000 | 0 |
| இ | அறைகலன் மீது தேய்மானம் | 0 | 0 | - 800 | 0 | 0 | | - 800 | |
| | சமன்பாடு | +1,20,000 | + 60,000 | + 19,200 | 0 | 0 | = | + 1,99,200 | 0 |
| ஈ | வங்கியில் செலுத்தியது | - 40,000 | 0 | 0 | + 40,000 | 0 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +80,000 | + 60,000 | +19,200 | + 40,000 | 0 | = | + 1,99,200 | 0 |
| உ | இணைய வங்கி மூலமாக மின்கட்டணம் செலுத்தியது | 0 | 0 | 0 | -500 | 0 | = | -500 | 0 |
| | சமன்பாடு | +80,000 | + 60,000 | +19,200 | + 39,500 | 0 | = | + 1,98,700 | 0 |
| | | 1,98,700 | | | | | = | 1,98,700 | |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

42.அ) **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 10 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( விற்பனை காசோலை மூலம் செய்யப்பட்டது ) | | 30,000 | 30,000 |
| 14 | கோபி க / கு ப<br>விற்பனை க/கு<br>( கடனுக்கு விற்பனை செய்தது ) | | 12,000 | 12,000 |
| 20 | ரொக்க க/கு ப<br>கோபி க/கு<br>( கோபியிடமிருந்து ரொக்கம் பெற்றது ) | | 12,000 | 12,000 |

**பேரேட்டுக் கணக்குகள்**

ப **ரொக்க கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2020ஆக 10 | விற்பனை க/கு | | 30,000 | 2020 ஆக 31 | இருப்பு கீ/ இ | | 42,000 |
| 20 | கோபி க/கு | | 12,000 | | | | |
| | | | 42,000 | | | | 42,000 |
| செப் 1 | இருப்புகீ/கொ | | 42,000 | | | | |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

ப **விற்பனை கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2020 ஆக 31 | இருப்பு கீ/இ | | 42,000 | 2020 ஆக 10<br>14 | ரொக்க க/கு<br>கோபி க/கு | | 30,000<br>12,000 |
| | | | 42,000 | | | | 42,000 |
| | | | | செப் 1 | இருப்பு கீ/ கொ | | 42,000 |

( அல்லது )

42. ஆ)

**பியர்லின் ஏடுகளில்**
**31.3.2017-ஆம் நாளைய இருப்பாய்வு**

| வ. எண் | கணக்கின் பெயர் | பே. ப. எ. | பற்று இருப்பு ₹ | வரவு இருப்பு ₹ |
|---|---|---|---|---|
| 1 | முதல் | | | 44,000 |
| 2 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 5,000 | |
| 3 | கூலி | | 800 | |
| 4 | எடுப்புகள் | | 4,000 | |
| 5 | கொள்முதல் | | 75,000 | |
| 6 | முதலீடு மீதான வட்டி | | | 2,000 |
| 7 | சுங்க வரி | | 3,000 | |
| 8 | கணிப்பொறி | | 20,000 | |
| 9 | விற்பனை | | | 72,000 |
| 10 | தொடக்கச் சரக்கிருப்பு | | 10,200 | |
| | மொத்தம் | | 1,18,000 | 1,18,000 |

43. அ)

**பொன்னியின் விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | வெ.செ.இ.எ | பே.ப.எ | தொகை ( ₹ ) | |
|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் | மொத்தம் |
| 2017 ஆகஸ்1<br>4<br>7 | செந்தில்<br>மாதவன்<br>கனகசபை | 68<br>74<br>78 | | | 20,500<br>12,800<br>7,500 |
| | விற்பனை க/கு வ | | | | 40,800 |



**பொன்னியின் விற்பனை திருப்ப ஏடு**

| நாள் | விவரம் | வரவு குறிப்பு எண் | பே.ப.எ | தொகை | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹. | மொத்தம் ₹. | |
| 2017 ஆகஸ்டு15<br>25 | செந்தில்<br>மாதவன் | 7<br>11 | | | 1,500<br>1,800 | |
| | விற்பனை திருப்பம் க/கு ப | | | | 3,300 | |

( அல்லது )

43.ஆ)

(i) **தேய்மானம் - வரையறுக்கவும்**

- ஸ்பைசர் மற்றும் பெக்லரின் கூற்றுப்படி, "தேய்மானம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில், எக்காரணத்தாலும் ஏற்படும் ஒரு சொத்தின் பயனளிப்பு கால இழப்பைக் குறிக்கும் ஒரு அளவாகும்".

( அல்லது )

- கார்ட்டரின் கூற்றுப்படி, "தேய்மானம் என்பது எக்காரணத்தினாலும், ஒரு சொத்தின் மதிப்பில் உண்டாகும் படிப்படியான மற்றும் நிலையான குறைவே ஆகும்."

(ii) **தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?**

1. <u>தேய்வு மற்றும் உராய்வு</u>
   - சாதாரணமாக புலனாகும் நிலைச் சொத்தை பயன்படுத்தும் போது, அதன் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. அது தேய்வு மற்றும் உராய்வு என்று அழைக்கப்படுகிறது.
   - தேய்வு ஏற்படும்போது, நிலைச் சொத்தின் மதிப்பு விகிதாச் சாரப்படி குறைகிறது.
2. <u>காலப்போக்கு</u>
   - காலப்போக்கு காரணமாக, ஒரு சில சொத்துகளை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாமல் இருந்தாலும், அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.
3. <u>வழக்கொழிவு</u>
   - நவீன பதிலி சொத்துகளின் வருகையால், சொத்துகளின் மதிப்பு குறைவது வழக்கொழிவு எனப்படும்.
   - புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையான செயல்முறைகள் காரணமாக, இது ஏற்படுகிறது.

   <u>உதாரணமாக</u>, நவீன கால கணினிகள் பயன்பாட்டாளர்களால் விரும்பப்படுவது.
4. <u>நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருப்பது</u>
   - தேவைக்கான நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கும்போது, அச்சொத்தின் பயன்பாடு நிறுத்தப்படுகிறது.
   - நிறுவனத்தின் திறனை விரிவாக்கம் செய்யும் போது , இச்சொத்துகளின் திறன் போதுமானதாக இல்லாமல் போகலாம்.



www.Padasalai.Net

5. <u>பராமரிப்பின்மை</u>
- சொத்துகள் சரிவர பராமரிக்கப்படும் போது, அச்சொத்தின் வாழ்நாள் அதிகரிக்கிறது.
- சொத்துகள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால், அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.

6. <u>அசாதாரணமான காரணிகள்</u>
- தீ விபத்து, இயற்கைச் சீற்றங்கள் போன்ற அசாதாரண காரணிகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில், நிலைச் சொத்தின் பயன்பாடு குறைந்து, நீக்கப்படும் நிலைக்கும் கொண்டு செல்லலாம்.

44. அ)

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) நிலம் வாங்குவதற்காக வழக்கறிஞருக்கு கொடுத்த சட்டச் செலவுகள்₹. 20,000 | முதலினச் செலவு |
| (ii) புதிய பொருளைச் சந்தையில் அறிமுகப்படுத்த மேற்கொண்ட பேரளவிலான விளம்பரச் செலவுகள்₹. 12,00,000 | நீள்பயன் வருவாயினச் செலவு |
| (iii) தொழிற்சாலை உரிமம் புதுப்பித்தது ₹. 12,000 | வருவாயினச் செலவு |
| (iv) தொழிற்சாலையில் வண்ணம் பூசுவதற்கானச் செலவு ₹. 4,000 | வருவாயினச் செலவு |
| (v) இரயில்வேத் துறைக்கு, இரயில் தண்டவாளம் அமைக்க செலுத்திய தொகை ₹. 50,000 | முதலினச் செலவு |

( அல்லது )

44. ஆ)

**இருபத்தி ரொக்க ஏடு**

ப (ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடையது) வ

| நாள் | பெறுதல்கள் | இ. எ. | பே. ப. எ. | தொகை ₹ தள்ளுபடி | தொகை ₹ ரொக்கம் | நாள் | செலுத்தல்கள் | சா. சீ. எ. | பே. ப. எ. | தொகை ₹ தள்ளுபடி | தொகை ₹ ரொக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2017 | | | | | | 2017 | | | | | |
| ஜன 1 | இருப்பு கீ/கொ | | | | 11,500 | ஜன 5 | இராமநாதன் க/கு | | | 10 | 300 |
| 10 | இராஜ கோபால் க/கு | | | 20 | 980 | 8 | கொள்முதல் க/கு | | | | 400 |
| 15 | விற்பனை க/கு | | | | 400 | 21 | சாந்தி க/கு | | | 5 | 295 |
| | | | | | | 25 | கூலி க/கு | | | | 50 |
| | | | | | | 31 | சஞ்சீவ் க/கு | | | 10 | 390 |
| | | | | | | 31 | இருப்பு கீ/இ | | | | 11,445 |
| | | | | 20 | 12,880 | | | | | 25 | 12,880 |
| பிப் 1 | இருப்பு கீ/கொ | | | | 11,445 | | | | | | |



45. அ) <u>வினோதினி ஏடுகளில் 2020, டிசம்பர் 31 ஆம் ஆண்டிற்கான</u>

ப <u>வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு</u> வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 2,500 | விற்பனை | | 7,000 |
| கொள்முதல் | | 3,300 | இறுதி சரக்கிருப்பு | | 4,000 |
| கூலி | | 2,700 | | | |
| மொத்த இலாபம் கீ/இ | | 2,500 | | | |
| | | 11,000 | | | 11,000 |
| சம்பளம் | | 2,600 | மொத்த இலாபம் கீ/கொ | | 2,500 |
| நிகர இலாபம் | | 2,400 | பெற்ற தள்ளுபடி | | 2,500 |
| | | 5,000 | | | 5,000 |

<u>வினோதினி ஏடுகளில் 31, டிசம்பர் 2020 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு</u>

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| முதல் | 52,000 | | இயந்திரம் | | 52,000 |
| <u>கூட்டுக</u> :நிகர இலாபம் | 2,400 | 54,400 | ரொக்கம் | | 6,400 |
| கடனீந்தோர் | | 8,000 | இறுதிச் சரகிருப்பு | | 4,000 |
| | | 62,400 | | | 62,400 |

( அல்லது )

45. ஆ) பல்வேறு வகையான குறிமுறையாக்க முறைகளைக் குறிப்பிடுக.

1) <u>தொடர்ச்சியான குறிமுறை</u>
- தொடர்ச்சியான குறிமுறையில், எண்கள் மற்றும் எழுத்துக்களை அடுத்தடுத்து வரிசையாக ஒதுக்கப்படுவதாகும்.
- இந்த குறிமுறைகள், காசோலை, இடாப்பு போன்ற பல மூல ஆவணங்களில் முதன்மையாக குறிப்பிடப்படுகிறது.
- தொடார்ச்சியான குறிமுறை, ஆவணங்கள் தேடுதலை எளிதாக்குகிறது.

<u>உதாரணமாக</u> :

| <u>குறிமுறை</u> | <u>கணக்குகள்</u> |
|---|---|
| CL001 | ABC நிறுமம் |
| CL002 | XYZ நிறுமம் |
| CL003 | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

2) <u>தொகுப்புக் குறிமுறை</u>

- ❖ தொகுப்புக் குறிமுறையில், ஒரு குறிப்பிட்ட பரப்பு எண்களை விரும்பிய அளவிலான துணைப் பரப்புகளாகப் பிரித்தெடுக்கப்படும் மற்றும் ஒவ்வொரு துணைப்பரப்பும், ஒரு குறிப்பிட்டக் குழுவுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.
- ❖ அதிகப்படியான தொகுப்பு குறிமுறை சூழ்நிலைகளில், துணைபரப்புகளில் உள்ள எண்கள் தொடர்ச்சியான குறிமுறையை தழுவியே இருக்கும்.
- ❖ அதாவது, எண்கள் அடுத்தடுத்து கூடி இருக்கும்.

<u>உதாரணமாக</u> :

| <u>குறிமுறை</u> | <u>விற்பனையாளர் வகை</u> |
|---|---|
| 100 - 199 | சிறிய விசைக் குழாய்கள் |
| 200 - 299 | நடுத்தர விசைக் குழாய்கள் |
| 300 - 399 | குழாய்கள் |
| 400 - 499 | பொறிகள் |

3) <u>மதியோட்டுக் குறிமுறை</u>

- ❖ மதியோட்டுக் குறிமுறை எழுத்துக்கள் அல்லது சுருக்கங்கள், ஒரு துண்டுத் தகவலை மனத்திற்கொள்ளச் செய்ய அடையாளமாக கொண்டிருக்கும்.

<u>உதாரணமாக</u> :

| <u>குறிமுறை</u> | <u>தகவல்</u> |
|---|---|
| பேபஎ | பேரேட்டு பக்கஎண் |
| இஎ | இரசீது எண் |

46. அ) <u>நிக்கோலஸ் ஏடுகளில் 2020, டிசம்பர் 31 ஆம் ஆண்டிற்கான</u>

ப <u>வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு</u> வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 1,000 | விற்பனை | | 15,100 |
| கொள்முதல் | | 10,000 | இறுதி சரக்கிருப்பு | | 2,100 |
| கூலி | 600 | | | | |
| <u>கூட்டுக</u> : கொடுபடவேண்டிய கூலி | 200 | 800 | | | |
| உள் ஏற்றிச்செல் செலவு | | 750 | | | |
| மொத்த இலாபம் கீ/இ | | 4,650 | | | |
| | | 17,200 | | | 17,200 |
| | | | மொத்த இலாபம் கீ/கொ | | 4,650 |
| விளம்பரம் | 500 | | | | |
| <u>கழிக்க</u>: முன்கூட்டி செலுத்தியது | 150 | 350 | பெற்ற கழிவு | 1,900 | |
| வெளித்தூக்கு கூலி | | 400 | <u>கழிக்க</u>: முன்கூட்டி பெற்றது | 400 | 1,500 |
| நிகர இலாபம் | | 6,000 | வாடகைப் பெற்றது | | 600 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 6,750 | | | 6,750 |

( அல்லது )

46. ஆ) **நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக.**

i) <u>ஏடுகளைப் பராமரிப்பவர்</u>

- ❖ நிதிச் சார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவு செய்து ஏடுகளைப் பராமரிக்கிறார்.
- ❖ நிதிநிலை அறிக்கைகளையும் பிற நிதி அறிக்கைகளையும் தயாரிக்கிறார்.

ii) <u>நிர்வாகத்திற்குத் தகவல்களைத் தருபவர்</u>

- ❖ முடிவுகளை எடுக்கவும் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கவும், நிர்வாகத்திற்குத் தேவையான நிதிச் சார்ந்த தகவல்களை அளித்து உதவுகிறார்.

iii) <u>வணிகச் சொத்துக்களின் காப்பாளர்</u>

- ❖ சொத்துக்களுக்கான பதிவேடுகளைப் பராமரிப்பதன் மூலம், நிர்வாகம் அந்தச் சொத்துக்களைப் பாதுகாத்து கட்டுப்படுத்த முடிகிறது.
- ❖ சொத்துக்களுக்கான காப்பீடு மற்றும் சொத்துகள் பராமரிப்பைப் பற்றிய ஆலோசனையை நிர்வாகத்திற்கு வழங்குகிறார்.

iv) <u>நிதி ஆலோசகர்</u>

- ❖ நிதிச் சார்ந்த தகவல்களை பகுப்பாய்வு செய்து , முதலீட்டுக்கான வாய்ப்புகள், செலவைக் குறைப்பதற்கான உத்திகள், எதிர்கால வளர்ச்சி மற்றும் விரிவு படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து ,வணிக மேலாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

v) <u>வரி மேலாளர்</u>

- ❖ குறித்த காலத்தில் வருமானவரி விவரம் தயாரிப்பு செய்தல், மற்றும் வருமானவரி செலுத்துதல் முதலியவற்றை உறுதி செய்கிறார்.
- ❖ வரி மேலாண்மை, வரிச் சுமையை குறைத்தல், வரிவிலக்கு பெறுதல் போன்றவற்றில் மேலாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

vi) <u>பொது தொடர்பு அலுவலர்</u>

- ❖ தேவைப்படும் பயனீட்டாளர்களுக்கு, கணக்கியல் பகுப்பாய்வு செய்யத் தேவைப்படும் விவரங்களை வழங்குகிறார்.

47. அ)

<u>திருத்தியப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ | எடுப்புகள் க/கு ப<br>பயணச்செலவு க/கு<br>( உரிமையாளரின் தனிப்பட்ட செலவு ₹. 200 பயணச் செலவு கணக்கில் பற்ற வைக்கப்பட்டதை திருத்தியது ) | | 200 | 200 |
| ஆ | கணேஷ் க/கு ப<br>ரமேஷ் க/கு<br>(கடனுக்கு ₹. 400 க்கு ரமேஷிடமிருந்து சரக்கு | | 400 | 400 |



www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| | வாங்கியது, தவறாக கணேஷ் கணக்கில் வரவு வைக்கப்பட்டதை திருத்தியது ) | | | |
| இ | சம்பளம் க/கு ப<br>மதி க/கு<br>( மதிக்கு ₹. 500 சம்பளம் செலுத்தியது பேரேட்டில் மதியின் கணக்கில் பற்று வைக்கப்பட்டதை திருத்தியது) | | 500 | 500 |
| ஈ | கட்டடம் க/கு ப<br>பழுதுபார்ப்பு க/கு<br>( கட்டட விரிவாக்கத்திற்காக ₹. 2,700 செலுத்தியது பழுதுபார்ப்புக் கணக்கில் பற்று வைக்கப்பட்டதை திருத்தியது ) | | 2,700 | 2,700 |
| உ | மேகலா க/கு ப<br>கிருஷ்ணன் க/கு<br>(மேகலாவுக்கு ₹. 700 க்கு கடனுக்கு சரக்கு விற்றது பேரேட்டில் கிருஷ்ணன் கணக்கில் எடுத்து எழுதப்பட்டதை திருத்தியது ) | | 700 | 700 |

( அல்லது )



ஜெயசீலியின் ஏடுகளில்

குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 1 | ரொக்கக் க/கு ப<br>ஜெயசீலி முதல் க/கு<br>(ஜெயசீலி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது) | | 80,000 | 80,000 |
| 2 | வங்கி க/கு ப<br>ரொக்கக் க/கு<br>(வங்கியில் ரொக்கம் செலுத்தியது) | | 40,000 | 40,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்கக் க/கு<br>(ரொக்கக் கொள்முதல் செய்தது) | | 5,000 | 5,000 |
| 4 | கொள்முதல் க/கு ப<br>லிப்டன் நிறுவனக் க/கு<br>(கடனுக்கு கொள்முதல் செய்தது) | | 10,000 | 10,000 |
| 5 | ரொக்கக் க/கு ப<br>விற்பனை க/கு<br>(ரொக்கத்திற்கு விற்பனைச் செய்தது) | | 11,000 | 11,000 |
| 6 | சம்பளக் க/கு ப<br>ரொக்கக் க/கு<br>(சம்பளம் வழங்கியது) | | 5,000 | 5,000 |
| 7 | லிப்டன் நிறுவனக் க/கு ப<br>வங்கி க/கு<br>(காசோலை மூலம் செலுத்தியது) | | 10,000 | 10,000 |
| 8 | அறைகலன் க/கு ப<br>ரொக்கக் க/கு<br>(ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது) | | 4,000 | 4,000 |
| 9 | மின்கட்டணக் க/கு ப<br>ரொக்கக் க/கு<br>(மின் கட்டணம் செலுத்தியது) | | 1,000 | 1,000 |
| 10 | காப்பீட்டு முனைமம் க/கு ப<br>வங்கி க/கு<br>(அறைகலனுக்கு காப்பீட்டு முனைமம் செலுத்தியது) | | 300 | 300 |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com